DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 398/2016 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 3 |
| Name | சரவணன் |
| Father / Husband Name | திருஞானம் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 11th August 2022.

---

முதல் விசாரணை:-

1) நான் சிவகங்கை இந்திராநகரில் குடியிருந்து வருகின்றேன். நான் டைம்கீப்பராக சிவகங்கை பேருந்து நிலையத்தில் வேலை செய்து வருகின்றேன். 07.04.2016ம் தேதி மாலை சுமார் 5.00 மணியளவில் செக்கிங் இன்ஸ்பெக்டர் அக்பரிடம் வேன்ஓட்டுநர் பிரச்சனை செய்ததாக கணேசன் என்பவர் என்னிடம் சொன்னார் நான் அங்கு செல்வதற்குள் பிரச்சனை முடிந்துவிட்டது. பிரச்சனை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க செக்கிங் இன்ஸ்பெக்டர் சென்றார் அவருடன் நானும் சென்றேன். யார் மீது புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனர்.

---

Hostile (அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154ன் படி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1) கடந்த 07.04.2016ம் தேதி மாலை 5.00 மணியளவில்

TN 65 B4237 சீட்டடு வேன் மூலம் சிவகங்கை நகர் பேருந்து நிலையத்தில் பஸ்க்காக நின்ற பயணிகளை அந்த வேன் ஓட்டுநர் சஞ்சீவ் குமார் என்பவர் பஸ்ஸ்டாண்டிற்குள் வந்து ஏற்றி கொண்டிருந்தார் என்றும் அப்போது அதே நேரத்தில் பேருந்தில் பயணிகளை ஏற்ற வேண்டி இருந்ததால் சஞ்சீவ் குமாரிடம் செக்கிங் இன்ஸ்பெக்டர் அக்பர் வண்டியை எடுக்க சொன்னார் என்றும், அப்போது எதிரி அக்பரை கெட்ட வார்த்தையால் பேசி வேனை வைத்து மோத வந்தார் என்றும், நானும் அப்போது பணியில் இருந்த முத்துகுமார் என்பவரும் சத்தம் போட்டவுடன் எதிரி அக்பரை பார்த்து கொலை மிரட்டல் விடுத்து சென்றார் என்றும், போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. அரசு பணியாளர் ஆன நான் அரசுக்கு எதிராக பொய் சாட்சியம் அளித்தால் எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

1) வேன் ஓட்டி வந்தவருக்கும், புகார்தாரருக்கும் என்ன சண்டை என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது நான் அங்கு இல்லை என்றால் சரிதான்.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 11.08.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.